# இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?



மோகன் சி. லாசரஸ்


# இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?



மோகன் சி. லாசரஸ்

முதல் பதிப்பு: **ஆகஸ்டு 2000,** பிரதிகள்: **2,000**
2ம் பதிப்பு: **அக்டோபர் 2005,** பிரதிகள்: **3,000**
3ம் பதிப்பு: **மே 2010,** பிரதிகள்: **2,000**
4ம் பதிப்பு: **ஆகஸ்டு 2011,** பிரதிகள்: **2,000**
5ம் பதிப்பு: **ஆகஸ்டு 2013,** பிரதிகள்: **2,000**
6ம் பதிப்பு: **ஜூலை 2020,** பிரதிகள்: **5,000.**
7ம் பதிப்பு: **ஜனவரி 2021,** பிரதிகள்: **5,000.**
8ம் பதிப்பு: **செப்டம்பர் 2021,** பிரதிகள்: **5,000.**
9ம் பதிப்பு: **ஜூன் 2022,** பிரதிகள்: **5,000.**
10ம் பதிப்பு: **பிப்ரவரி 2023** பிரதிகள்: **3,000**
11ம் பதிப்பு: **டிசம்பர் 2023** பிரதிகள்: **5,000**

---



வெளியீடு:
**இயேசு விடுவிக்கிறார்,**
நாலுமாவடி – 628 211, தூத்துக்குடி மாவட்டம்.

## உங்கள் சகோதரனிடமிருந்து...



நான் ஊழியங்களுக்குச் செல்கிற பல இடங்களில், “நான் இரட்சிக்கப்பட வேண்டும். அதற்காக ஜெபியுங்கள்” என்ற தாகத்தோடு வருகிற பலரைச் சந்திக்கிறேன். சிலர், “இரட்சிக்கப்பட நான் என்ன செய்ய வேண்டும்?” என்று வாஞ்சையோடு கேட்பதுண்டு.

இவ்விதமாக, தாகத்தோடிருக்கிற மக்களுக்காக நான் ஜெபித்து, ஆலோசனை கொடுப்பதுண்டு. சில சமயங்களில், இப்படிப்பட்ட ஆத்துமாக்களுக்குத் தேவையான ஆலோசனை கொடுக்க எனக்குச் சமயம் கிடைக்காமல்கூடப் போய் விடும்.

ஆகவே, எல்லோரும் சுலபமாகப் புரிந்து கொள்ளும் விதத்தில் இரட்சிப்பைக் குறித்து, இந்தச் சிறிய புத்தகத்தை எழுதும்படி, ஆவியானவர் என்னை ஏவினார். தேவ ஒத்தாசையோடு இப்புத்தகத்தை எழுதி முடித்தேன்.

நீங்கள் படித்து முடித்து, பெற்றுக் கொண்ட ஆசீர்வாதத்தை எனக்கு எழுதுங்கள். மற்றவர்களுக்கும் படிக்கக் கொடுங்கள்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

உங்கள் சகோதரன்,



| வ.எண் | பொருளடக்கம்! | பக்கம் எண் |
| --- | --- | --- |
| 1. | நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டும்! | 1 |
| 2. | எது இரட்சிப்பு அல்ல? | 3 |
| 3. | ‘இரட்சிப்பு’ என்றால் என்ன? | 7 |
| 4. | எனது அனுபவம்! | 9 |
| 5. | இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? | 13 |
| 6. | நீங்கள் பாவி என்பதை உணர வேண்டும்! | 17 |
| 7. | நீங்கள் இயேசு கிறிஸ்துவிடம் வர வேண்டும்! | 21 |
| 8. | உங்கள் பாவங்களை அறிக்கையிட வேண்டும்! | 25 |
| 9. | விசுவாசத்தினால் உங்கள் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும்! | 27 |
| 10. | வாயினால் அறிக்கையிட வேண்டும்! | 31 |
| 11. | நீங்கள் ஏன் பெற்றுக் கொள்ளக் கூடாது? | 33 |
| 12. | இரட்சிப்பைப் புறக்கணித்தால்? | 35 |
| 13. | இரட்சிக்கப்படும்போது... | 37 |
| 14. | இரட்சிக்கப்பட்ட பின்... | 39 |

# நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டும்!

இதுவே, உங்களைக் குறித்த தேவனுடைய அநாதித் தீர்மானம்!

ஒரு பிரசங்கியார், எங்கு சென்றாலும், **'இரட்சிக்கப்பட வேண்டும்!' 'மறுபடியும் பிறக்க வேண்டும்!' 'மனந்திரும்ப வேண்டும்!'** என்றே பிரசங்கித்து வந்தார். இதைக் கவனித்த ஒரு வாலிபன், ஒருநாள் அவரிடம் சென்று,

"நீங்கள் எங்கே பிரசங்கித்தாலும், 'இரட்சிக்கப்பட வேண்டும்!' 'மறுபடியும் பிறக்க வேண்டும்!' 'மனந்திரும்ப வேண்டும்!' என்றே பிரசங்கிக்கிறீர்களே, காரணம் என்ன? வேறு காரியங்களைப் பற்றிப் பிரசங்கித்தால் என்ன?" என்று கேட்டான்.

அதற்கு அந்தப் பிரசங்கியார், அந்த வாலிபனைப் பார்த்து, சுருக்கமான ஒரு பதிலைச் சொன்னார். **"ஏனென்றால், நீ கட்டாயம் இரட்சிக்கப்பட வேண்டும்"** என்பதே அந்த பதில்.

இன்றும் அநேகக் கிறிஸ்தவர்கள், "இரட்சிப்பைப் பற்றியே ஏன் பிரசங்கிக்க வேண்டும்? 'இரட்சிக்கப்பட்டேன்' என்று ஏன் சொல்ல வேண்டும்?" என்று, இரட்சிப்பைக் குறித்துப் பிரசங்கிக்கும் தேவனுடைய ஊழியர்களையும், 'இரட்சிக்கப்பட்டேன்' என்று சாட்சி சொல்லும் தேவப் பிள்ளைகளையும் குறை கூறித் திரிவதையும் பார்க்கிறோம்.

ஆனால், இதை வாசிக்கும் அன்பு நண்பரே, **நீங்கள் மனந்திரும்ப வேண்டும், இரட்சிக்கப்பட வேண்டும்** என்பதே, தேவனுடைய உள்ளத்தின் பாரமாயிருக்கிறது.

ஆகவேதான், பரிசுத்த வேதாகமம் முழுவதும் மனந்திரும்புதலை முக்கியப்படுத்தி, கர்த்தர் எழுதி வைத்திருக்கிறார். பழைய ஏற்பாட்டில், தேவன், ஜனங்களை மனந்திரும்பும்படியாக அழைக்கிறார்.

**"துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ? அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்." எசேக்கியேல் 18:23, ஏசாயா 55:7, எரேமியா 3:14, 22** போன்ற வேத

வசனங்களும், மனந்திரும்பும்படியாகவே நம்மை அழைக்கின்றன.

அடுத்து, நம்முடைய தேவன், '**இயேசு**' என்ற பெயரில், இந்த உலகத்தில் உலாவியபோதும், மனந்திரும்புதலையே முக்கியப்படுத்திப் பேசினார் என்பதாக, புதிய ஏற்பாடு கூறுகிறது.

**"அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்." (மத்தேயு 4:17).**

**" காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார்." (மாற்கு 1:15).**

இயேசு கிறிஸ்துவின் உயிர்தெழுதலுக்குப் பின், அவரால் அனுப்பப்பட்ட சீஷர்களும் மனந்திரும்புதலையே பிரசங்கித்தார்கள்.

**"உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக்குணப்படுங்கள்." அப். 3:20.**

**"...இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்." அப். 17:30.**

இன்றும் கர்த்தர், தம் ஊழியர்களைக் கொண்டு இதையே பிரசங்கித்து வருகிறார். '**இரட்சிப்பு**' என்பது, இன்றைக்கு வந்த ஒரு புதிய உபதேசமல்ல. இது ஆதியிலிருந்தே, கர்த்தர், தம் ஜனங்களுக்கு வற்புறுத்தி வந்ததாகும். ஆகவே, வீண் வாக்குவாதம் பண்ணுவதை விட்டு விட்டு, **நீங்களும் மனந்திரும்புங்கள்.**

'**நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டும்.**' இதுதான் உங்களை நேசிக்கும் தேவனுடைய பாரம். இதற்காகவே இந்தப் புத்தகத்தை எழுதும்படியாகக் கர்த்தர் என்னை ஏவினார்.

**உங்களைக் காட்டிலும் உங்கள் இரட்சிப்பைக் குறித்து, உங்களுக்காக சிலுவையில் மரித்து, உயிர்த்த இயேசு கிறிஸ்து அதிக அக்கறையுள்ளவராயிருக்கிறார்!**

## 2 எது இரட்சிப்பு அல்ல?

இரட்சிப்பின் அனுபவம் இல்லாமலேயே, தாங்கள் சரியாக இருப்பதாக எண்ணிக் கொண்டு, இன்று அநேகர் தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இரட்சிப்பைக் குறித்து நாம் அறிந்து கொள்ளும் முன்பாக, "**எது இரட்சிப்பு அல்ல?**" என்பதை அறிந்து கொள்வது அவசியமாக இருக்கிறது.

"மற்றவர்களைப்போல, நான் குடிப்பதில்லை, வெறிப்பதில்லை, சினிமாவிற்குச் செல்வதில்லை, புகை பிடிப்பதில்லை, யாரிடமும் வம்புக்குச் செல்வதில்லை, நான் சரியாகத்தான் இருக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டு, இதையே அநேகர் இரட்சிப்பாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அன்பு நண்பரே, இப்படிப்பட்ட சன்மார்க்க ஜீவியம் இரட்சிப்பு ஆகாது.

**"...சன்மார்க்கனையும், துன்மார்க்கனையும் சங்காரம்பண்ணுவேன்." எசேக்கியேல் 21:3.**

**"...சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் அவர்** (கர்த்தர்) **அழிக்கிறார்." யோபு 9:22.**

என்று, சன்மார்க்கனுடைய முடிவைக் குறித்துக்கூட பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. எனவே, ஒருவேளை நீங்கள் **சன்மார்க்க ஜீவியத்திலிருந்தாலும் நீங்களும் இரட்சிக்கப்பட வேண்டும்!**

இன்னும் சிலர், "நான் ஒழுங்காக ஜெபிக்கிறேன், வேதம் வாசிக்கிறேன், தவறாமல் ஆலயத்திற்குச் செல்கிறேன், கூட்டங்களுக்குச் செல்கிறேன், காணிக்கையெல்லாம் கொடுக்கிறேன், இரட்சிக்கப்பட்டேன்" என்று சொல்லும் மக்களைக் காட்டிலும், "ஆலயக் காரியங்களிலும், ஊழியக் காரியங்களிலும் அதிக உற்சாகத்தோடு உழைக்கிறேன். ஆகவே, நான் சரியாகத்தான் இருக்கிறேன்" என்று தங்களையே ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட பக்தியெல்லாம் இரட்சிப்பு ஆகாது. இரட்சிக்கப்பட்ட பிறகு, ஒரு கிறிஸ்தவன் பின்பற்ற வேண்டிய காரியங்கள்தான் இவைகள்.

இஸ்ரவேலில் போதகனாயிருந்த, '**நிக்கொதேமு**' என்னப்பட்ட ஒரு பரிசேயன், ஒருநாள் இயேசு கிறிஸ்துவிடம் வந்தார். அவர், மோசே மூலமாகக் கர்த்தர் கொடுத்த நியாயப் பிரமாணத்தை அப்படியே பின்பற்றி நடக்கிற ஒரு பரிசேயன். வாரத்திற்கு இரண்டு முறை உபவாசிக்கிற யூதன். தன் வருமானம் எல்லாவற்றிலும் தசம பாகம் கொடுக்கிறவர். வேதத்தைக் கற்று, இஸ்ரவேல் மக்களுக்குப் பிரசங்கிக்கிற ஒரு போதகன்.

இப்படிப்பட்ட நிக்கோதேமுவைப் பார்த்துத்தான் இயேசு கிறிஸ்து சொன்னார்: **"...ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்." யோவான் 3:3.**

இதனுடைய அர்த்தம் என்ன?

'நிக்கொதேமுவே, நீ நியாயப் பிரமாணங்களைக் கற்று, அதன்படி நடக்கிறவன்தான்! உபவாசித்து, ஜெபிக்கிற யூதன்தான்! தவறாமல் தசம பாகக் காணிக்கைகளைக் கொண்டுபோய், ஆலயத்தில் செலுத்துகிறவன்தான்! மற்றவர்களுக்குப் பிரசங்கிக்கிற பிரசங்கிதான்! என்றாலும், நீ மறுபடியும் பிறக்காவிட்டால், மனந்திரும்பாவிட்டால், இரட்சிக்கப்படாவிட்டால் பரலோக ராஜ்ஜியத்தைக் காண மாட்டாய்.'

இதுவே நிக்கொதேமுவுக்கு இயேசு கிறிஸ்துவின் வார்த்தை. அன்பு நண்பரே, இதுதான் இன்று உங்களுக்கும் இயேசு கிறிஸ்துவின் வார்த்தை.

உங்கள் சடங்காச்சார வாழ்க்கை, காணிக்கை, உங்கள் பக்தி, உங்களை பரலோக ராஜ்ஜியத்திற்குக் கொண்டு செல்ல முடியாது. **நீங்கள் மனந்திரும்ப வேண்டும், இரட்சிக்கப்பட வேண்டும்.**

மேலும் சிலர், "நான் ஜெபித்தபடியினால், இயேசு கிறிஸ்து எனக்கு எவ்வளவு நன்மை செய்திருக்கிறார்! நான் ஜெபித்து, வியாதி சுகமாயிருக்கிறது. என் ஜெபத்திற்கு இயேசு கிறிஸ்து பதில் கொடுத்திருக்கிறார்!" என்று கூறிக் கொண்டே, இரட்சிப்பின் அனுபவமில்லாமல் பாவத்திற்குள் இருக்கிறார்கள்.

உங்கள் ஜெபத்திற்குப் பதில் கிடைத்து விட்டதால், நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டீர்கள் என்பதல்ல அர்த்தம். ஒரு சமயத்தில் இயேசு கிறிஸ்து, பிசாசின் ஜெபத்திற்குக்கூட பதில் கொடுத்தார்.

லேகியோன் பிசாசுகள் பன்றிக் கூட்டத்தில் போகும்படி இயேசு கிறிஸ்துவிடம் வேண்டிக் கொண்டன. 'போங்கள்' என்று இயேசு கிறிஸ்து அந்தப் பிசாசுகளின் வேண்டுதலுக்குப் பதில் கொடுத்தார் **(லூக்கா 8:26-33).**

ஆகவே, உங்கள் ஜெபத்திற்குப் பதில் கிடைக்கிறது என்பதை வைத்துக் கொண்டு, உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்ளாதீர்கள்.

**நீங்களும் இரட்சிக்கப்பட வேண்டும்.**

## சன்மார்க்க ஜீவியமும், பக்தி வாழ்க்கையும் இரட்சிப்பு அல்ல!



## 3 ‘இரட்சிப்பு’ என்றால் என்ன?

‘மனந்திரும்புதல்,’ ‘மறு பிறப்பு,’ ‘பாவ மன்னிப்பு’ என்று, இரட்சிப்பிற்கு பரிசுத்த வேதாகமத்தில் பல பெயர்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. என்றாலும், நாம் புரிந்து கொள்ளும்படியாகச் சொல்ல வேண்டுமானால், **‘தேவனுடைய பிள்ளையாக மாறுதல்!’** என்பதே அதன் அர்த்தம்.

**“பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்;...” (1 யோவான் 3:8)** என்ற வேத வசனத்தின்படி, பாவத்தில் நிலைத்திருக்கிற எவனும் பிசாசின் பிள்ளையாயிருக்கிறான்.

இப்படியாக, பாவத்திலிருக்கிற ஒருவன், தன் பாவத்தைவிட்டு மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவின் பிள்ளையாக மாறுகிறான். இதுதான் இரட்சிப்பு!

பிசாசின் ஆளுகைக்குள்ளிருந்து தேவனுடைய ஆளுகைக்குள் வருவது, பிசாசின் பிள்ளையாயிருந்த ஒருவன், தேவனுடைய பிள்ளையாய் மாறுவது. இதுதான் இரட்சிப்பு!

ஒன்று, நீங்கள் பிசாசின் பிள்ளையாயிருக்க வேண்டும். அல்லது, தேவனுடைய பிள்ளையாயிருக்க வேண்டும். இரண்டில் ஒன்றுதான்.


பாவத்தில் நிலைத்திருந்து, பிசாசின் ஆளுகைக்குள் இருக்கும்வரை நீங்கள் பிசாசின் பிள்ளைதான். உங்கள் பாவத்தை விட்டு நீங்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்படும்போது, தேவனுடைய பிள்ளையாய் மாறுகிறீர்கள்.

**“அவருடைய** (இயேசு கிறிஸ்துவினுடைய) **நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.” யோவான் 1:12.**

**நீங்கள் தேவனுடைய பிள்ளையாக** மாற **வேண்டும்** என்பதே தேவனுடைய விருப்பம்.

ஆகவே, பாவத்தை விட்டு மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளுங்கள்.

**பிசாசின் ஆளுகைக்குள்ளிருந்து, இயேசு கிறிஸ்துவின் மூலமாய் தேவனுடைய ஆளுகைக்குள் வருவதே இரட்சிப்பு!**



# 4 எனது அனுபவம்!

ஒரு இந்துக் குடும்பத்தில் பிறந்து, இந்து மார்க்கத்தில் வைராக்கியமுள்ளவனாய் வளர்ந்த நான், எனது 14வது வயதில் (1969ம் ஆண்டு) டாக்டர்களால் கைவிடப்பட்டு, வியாதிப் படுக்கையில் இருக்கும்போது, இயேசு கிறிஸ்து, தம்முடைய அதிசய வல்லமையினால் என்னைக் குணமாக்கினார்.

“**இயேசுவே மெய்யான தெய்வம்**” என அறிந்த நான், கிறிஸ்தவ மார்க்கத்தில் சேர்க்கப்பட்டேன். ஒழுங்காக வேதம் வாசிக்கிற, ஜெபிக்கிற, ஆலயத்திற்குச் செல்கிற ஒரு பக்தியுள்ளவனாகவே காணப்பட்டேன்.

என்னைப் பார்ப்பவர்கள், “இந்துக் குடும்பத்திலிருந்து வந்த இந்த வாலிபன், எவ்வளவு பக்தியோடு இருக்கிறான்!” என்று ஆச்சரியப்பட்டுச் சொல்லத் தக்க விதத்தில் என் வாழ்க்கை இருந்தது.

ஆனால், என் இருதயமோ, வாழ்க்கையோ மாற்றப்படாத நிலையில், இரட்சிப்பின் அனுபவமில்லாத நிலையிலேயே ஜீவித்து வந்தேன்.

மூன்று ஆண்டுகள் இவ்விதமாகக் கழிந்தது. இரட்சிப்பைப் பற்றி யாரும் எனக்குச் சொல்லவில்லை. “நான் வாழும் இந்த வாழ்க்கையே கிறிஸ்தவ வாழ்க்கை” என எண்ணிக் கொண்டிருந்தேன்.

1972ம் ஆண்டு, ஒரு கூட்டத்திற்குச் சென்றிருந்தபோது, அநேக வாலிபர்களுடைய சாட்சியைக் கேட்டேன்.

‘இயேசு கிறிஸ்து என் பாவங்களை மன்னித்தார்!’, ‘இயேசு கிறிஸ்து என்னை இரட்சித்தார்!’, ‘இயேசு கிறிஸ்து என் வாழ்க்கையை மாற்றினார்!’, ‘இயேசு கிறிஸ்து என்னோடு பேசினார்!’...என்று, அந்த வாலிபர்கள் சொன்ன சாட்சிகள் என் உள்ளத்தைத் தொட்டன.

‘**எனக்கும் இந்த இரட்சிப்பு வேண்டும். என் பாவங்களும் மன்னிக்கப்பட வேண்டும். நானும் இயேசு கிறிஸ்துவோடு பேச வேண்டும்**’ என்கிற வாஞ்சை என் உள்ளத்தில் எழுந்தது.

கூட்டம் முடிந்ததும், அந்தக் கூட்டத்தை நடத்திய ஊழியரைப் போய் சந்தித்தேன். அவர் எனக்கு இரண்டு வேத வசனங்களை எடுத்துக் காண்பித்து, "இதை வாசித்து, ஜெபியுங்கள்" என்று கூறினார். வேறு ஒன்றுமே எனக்குச் சொல்லவில்லை.

வீட்டிற்கு வந்து, அந்த இரண்டு வசனங்களையும் வாசித்து, ஜெபிக்க ஆரம்பித்தேன்.

**"இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குருகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை.**

**உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப்பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது." ஏசாயா 59:1,2.**

இந்த வேத வார்த்தைகள், என் பாவங்களை எனக்கு உணர்த்தின. மற்றவர்களுடைய பார்வையில் நல்லவனாகக் காணப்பட்ட என் இருதயத்தைக் கர்த்தர் எனக்குக் காண்பித்தபோது, நான் பாவத்தின் படுகுழிக்குள் இருப்பதை உணர்ந்தேன்.

"என் பாவங்களே எனக்கும், தேவனுக்கும் நடுவாகப் பிரிவினையை உண்டாக்குகிறது" என்பதை நான் உணர்ந்தபோது, கண்ணீரோடு என் பாவங்களை தேவ சமூகத்தில் அறிக்கையிட ஆரம்பித்தேன்.

கர்த்தர் எனக்கு உணர்த்திய ஒவ்வொரு பாவங்களையும் கண்ணீரோடு ஆண்டவரிடம் அறிக்கையிட்டு, மன்னிப்பிற்காகக் கெஞ்சினேன். என் பாவங்களை அறிக்கையிட, அறிக்கையிட, என் உள்ளத்தின் பாரம் குறைந்து கொண்டே வந்தது.

கடைசியாக, "**நீ சாகாதபடிக்கு, உன் பாவங்களை நீங்கச் செய்தேன்.**" **(2 சாமு. 12:13)** என்று, அவர் என்னோடு பேசியபோது, என் உள்ளத்தில் ஏற்பட்ட சந்தோஷத்திற்கு அளவே இல்லை. ஆம்! நம் பாவங்கள் மன்னிக்கப்படுவதைக் காட்டிலும் பெரிய சந்தோஷம் இந்த உலகத்தில் வேறொன்றுமில்லை.

மூன்று ஆண்டுகளாக ஜெபிப்பதிலும், வேதம் வாசிப்பதிலும், ஆலயம் செல்வதிலும் தவறாமல் நடந்து கொண்ட போதிலும், என் பாவங்களை விட்டு மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட அன்றுதான், வேதத்தின்படி நான் ஒரு கிறிஸ்தவனாக மாறினேன். இயேசு கிறிஸ்துவின் பிள்ளையானேன்.

என்ன சந்தோஷம்! என்ன மகிழ்ச்சி! என் வாழ்க்கையே மாறி விட்டது! நான் மாறவில்லை, இயேசு கிறிஸ்துவே என்னை மாற்றினார்! உங்களையும் மாற்றுவார். இயேசு கிறிஸ்துவண்டை வாருங்கள். பாவங்களை அறிக்கையிடுங்கள். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும். தெய்வீக சமாதானம் உங்கள் உள்ளத்தை நிரப்பும்.

**“தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.” நீதி. 28:13.**

---

**நம் பாவங்கள் மன்னிக்கப்படுவதைக் காட்டிலும், பெரிய சந்தோஷம் வேறொன்றுமில்லை!**

---



5

# இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?

கர்த்தருடைய ஊழியர்களாகிய பவுலும், சீலாவும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினிமித்தமாக பிலிப்பி பட்டணச் சிறைச் சாலையில் அடைக்கப்பட்டிருந்தபோது, அவர்களில் தேவனுடைய வல்லமையையும், அதிசயங்களையும் கண்ட சிறைச் சாலைக்காரன், அவர்களை நோக்கி இப்படியாக ஒரு கேள்வியைக் கேட்டான்:

**"...ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்..." அப். 16:30.**

இன்றும் இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும், அற்புதங்களையும் காணக் கூடிய ஆத்துமாக்கள் இக்கேள்வியை எழுப்புகின்றனர். கிறிஸ்துவின் அன்பையும், மன்னிப்பையும், வல்லமையையும் வாசித்த உங்கள் உள்ளத்திலும் இன்று இக்கேள்வி எழும்பியிருக்கிறதல்லவா?

என் உள்ளத்தில், அநேகர் இக்கேள்வியை எழுப்பியபடியால், 'எல்லோரும் புரிந்து கொள்ளும்படியாக இரட்சிப்பை விளக்குவது எப்படி?' என்று தேவ சமூகத்தில் ஜெபித்துக் கொண்டிருந்தபோது, 'மனந்திரும்பிய கெட்ட குமாரன்' கதையைக் கர்த்தர் என் கண் முன்பாகக் கொண்டு வந்தார்.

இயேசு கிறிஸ்து சொன்ன அந்தக் கதையைப்போல், எல்லோரும் புரிந்து கொள்ளும்படியாக இரட்சிப்பை விளக்கக் கூடிய செய்தி வேறொன்றுமில்லை.

**லூக்கா 15**ம் அதிகாரத்தில் அடங்கியிருக்கும் அந்த நிகழ்ச்சியை வாசிப்போம்.

இயேசு கிறிஸ்து சொன்னது: "**...ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்.**

**அவர்களில் இளையவன் தகப்பனை நோக்கி: தகப்பனே, ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கை எனக்குத் தரவேண்டும் என்றான். அந்தப்படி அவன் அவர்களுக்குத் தன் ஆஸ்தியைப் பங்கிட்டுக்கொடுத்தான்.**

**சில நாளைக்குப்பின்பு, இளையமகன் எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு, தூரதேசத்துக்குப்**

புறப்பட்டுப்போய், அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம்பண்ணி, தன் ஆஸ்தியை அழித்துப்போட்டான்.

எல்லாவற்றையும் அவன் செலவழித்தபின்பு, அந்தத் தேசத்திலே கொடிய பஞ்சமுண்டாயிற்று. அப்பொழுது அவன் குறைவுபடத்தொடங்கி,

அந்தத் தேசத்துக் குடிகளில் ஒருவனிடத்தில் போய் ஒட்டிக்கொண்டான். அந்தக் குடியானவன் அவனைத் தன் வயல்களில் பன்றிகளை மேய்க்கும்படி அனுப்பினான்.

அப்பொழுது பன்றிகள் தின்கிற தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான், ஒருவனும் அதை அவனுக்குக் கொடுக்கவில்லை.

அவனுக்குப் புத்தி தெளிந்தபோது, அவன்: என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன்.

நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன்.

இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன் என்று சொல்லி;

எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான். அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்.

குமாரன் தகப்பனை நோக்கி: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன், இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல என்று சொன்னான்.

அப்பொழுது தகப்பன் தன் ஊழியக்காரரை நோக்கி: நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டுவந்து, இவனுக்கு உடுத்தி, இவன் கைக்கு மோதிரத்தையும்

**கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள். கொழுத்த கன்றைக் கொண்டுவந்து அடியுங்கள். நாம் புசித்து, சந்தோஷமாயிருப்போம்.**

**என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான் என்றான். அப்படியே அவர்கள் சந்தோஷப்படத் தொடங்கினார்கள்.” லூக்கா 15:11-24.**

(இந்த வேதப் பகுதியை நீங்கள் புரிந்து கொள்ளும்வரை, பலமுறை வாசித்த பிறகு, அடுத்த அத்தியாயத்திற்குக் கடந்து செல்லுங்கள். இதில்தான் உங்கள் இரட்சிப்பிற்கு நீங்கள் செய்ய வேண்டிய காரியங்கள் எல்லாம் அடங்கியிருக்கிறது)

.



## 6 நீங்கள் பாவி என்பதை உணர வேண்டும்!

தகப்பனை விட்டுப் பிரிந்து சென்ற இளைய மகன், தன் பசிக்கு பன்றியின் தவிடுகூடக் கிடைக்காத சூழ்நிலை வந்தபோது, புத்தி தெளிந்து, தன் பாவத்தினால் ஏற்பட்ட விளைவை உணர்ந்தான். இதுதான் அவனது இரட்சிப்பிற்கு முதல்படியாய் அமைந்தது.

சில ஆண்டுகளுக்கு முன்பாக, ஒரு கிராமத்திற்கு கூட்டங்கள் நடத்தும்படியாக அழைக்கப்பட்டிருந்தேன். ஒருநாள் பகல் நேரத்தில், சில வீடுகளைச் சந்தித்து ஜெபிக்கும்படியாக அந்த சபை ஊழியர் என்னை அழைத்துச் சென்றார்.

வியாதியோடிருக்கும் ஒரு வயதான தகப்பனாருக்காக ஜெபிக்கும்படியாக ஒரு வீட்டில் பிரவேசித்தோம். எங்களைப் பார்த்ததும், மிகுந்த கஷ்டத்தோடு படுக்கையில் எழுந்து அமர்ந்தார்.

ஜெபிக்கும் முன்பாக, மத்தேயு 9:2ம் வசனத்தை அவருக்காக வாசிக்கும்படியாக கர்த்தரால் ஏவப்பட்டேன்.

அங்கே படுக்கையில் கிடந்த ஒரு திமிர்வாதக்காரனை, இயேசு கிறிஸ்துவினிடத்தில் கொண்டு வந்தார்கள். இயேசு கிறிஸ்து அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி: **"...மகனே, திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார்."**

இதை வாசித்து விட்டு, நான் அந்தப் பெரியவரை நோக்கி: "ஐயா, என்றைக்காவது இயேசு கிறிஸ்து உங்களைப் பார்த்து, 'உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது' என்று சொல்லியிருக்கிறாரா?" என்று கேட்டேன்.

அவற்கு அவர், "அப்படியெல்லாம் நான் பாவம் ஒன்றுமே செய்யவில்லை. ஏதோ கோயிலுக்குப் போவேன். ஜெபம் பண்ணுவேன். நான் உண்டு, என் வேலை உண்டு என்று இருப்பேன். நான் மற்றவர்களைப்போல குடிப்பதில்லை, வெறிப்பதில்லை, யாருக்கும் எந்தத் தீமையும் செய்ததில்லை" என்று சொன்னார்.

இந்தப் பதிலை அவர் சொன்னதும், மற்றொரு வேதப் பகுதியை அவருக்கு வாசிக்கும்படியாக கர்த்தர் என்னை ஏவினார். உடனே அப்பகுதியை எடுத்து வாசித்தேன்.

**"...மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும்,**

**களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும், புறப்பட்டுவரும்.**

**பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும்..." மாற்கு 7:21-23.**

என்ற இந்த வேத வசனங்களை நான் அவருக்காக வாசித்துக் கொண்டிருக்கும்போதே, அவரது முகத்தில் ஒரு மாறுதல் ஏற்படுவதைக் கண்டேன். நான் அவரை நோக்கி: "ஐயா, இதில் சொல்லப்பட்ட ஒரு பாவமும் நீங்கள் செய்யவில்லையா?" என்றேன்.

"இதிலுள்ள பாவங்களையெல்லாம் நான் செய்திருக்கிறேன்" என்பதாக தாழ்ந்த குரலில் கூறினார்.

அதுவே அவரது இரட்சிப்பிற்கு முதல்படியாய் அமைந்தது.

இதை வாசித்துக் கொண்டிருக்கும் நண்பரே, நீங்கள் ஒரு பாவி. **உங்களுக்கு இரட்சிப்பு தேவை** என்பதை நீங்கள் உணரும்போதுதான், இந்த மகிமையான இரட்சிப்பிற்குள் வர முடியும்.

"மற்றவர்களைப்போல் நான் குடிப்பதில்லை, துன்மார்க்கமாய் அலைவதில்லை, ஆலயத்திற்குச் செல்கிறேன், ஜெபிக்கிறேன், நான் சரியாகத்தான் இருக்கிறேன்" என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா? தேவனுடைய வார்த்தைகளை வாசியுங்கள்.

**"மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம்,**

**விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள்,**

**பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று...உங்களுக்குச் சொல்லுகிறேன்.'' கலா. 5:19-21.**

**"...வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்; ஸ்தோத்திரஞ்செய்தலே தகும்.**

**விபசாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக்காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லை...'' எபே. 5:4,5.**

**"அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும்,**

**திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை.'' 1 கொரி. 6:9,10.**

இந்த தேவனுடைய வசனங்களின்படி, இன்னும் நீங்கள் பாவத்தில் இருக்கிறீர்கள் அல்லவா? இதில் சொல்லப்பட்டிருக்கும் பாவங்கள், உங்களிடத்தில் உண்டல்லவா? **நீங்கள் ஒரு பாவி** என்பதை தேவ சமூகத்தில் ஒத்துக் கொள்ளுங்கள். **உங்களுக்கும் இரட்சிப்பு தேவை** என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

இன்று உங்கள் வாழ்க்கையில் சமாதானமில்லாமல், மகிழ்ச்சியில்லாமல் வியாதி, கவலை, நெருக்கங்கள் மத்தியில் சந்தோஷமில்லாமல் கலங்குகிறீர்களல்லவா? உங்கள் பாவங்களின் நிமித்தமாகத்தான், இன்று நீங்கள் இவ்விதமாய் கலங்கித் தவிக்கிறீர்கள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். தகப்பன் வீட்டில் நிறைவோடு, மகிழ்ச்சியோடு இருக்க

வேண்டிய இளைய குமாரன், தகப்பனை விட்டுப் பிரிந்து வந்தபடியால், பன்றியின் தவிடுகூடக் கிடைக்காதபடி பசியினால் வாடினான். “என் தகப்பனை விட்டுப் பிரிந்து, ‘மனம்போல் வாழ வேண்டும்’ என்று வந்தபடியினால் அல்லவா எனக்கு இந்தக் கஷ்டம்?’ என்பதை உணர்ந்தான்.

---

**நீங்களும் தேவனை விட்டுப் பிரிந்து மனம்போல் பாவத்தில் வாழ்வதினால்தான், உங்கள் வாழ்க்கையில் சமாதானமில்லாமல், வியாதியினாலும், பலவிதமான போராட்டங்களினாலும் தவிக்கிறீர்கள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.**

---



## 7 நீங்கள் இயேசு கிறிஸ்துவிடம் வர வேண்டும்!

தான் பாவிதான் என்பதை உணர்கிற அநேகர் இரட்சிக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம், தங்கள் பாவங்களை விட்டு அவர்கள் மனந்திரும்பாததேயாகும்.

தகப்பனை விட்டுப் பிரிந்து சென்ற இளைய மகன், தன் பாவங்களை உணர்ந்தபோது,

**“எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான்.” லூக்கா 15:20.**

“நான் பாவிதான்” என்று ஒத்துக் கொள்கிறீர்கள்!

உங்கள் பாவத்தைக் குறித்து உணர்வடைகிறீர்கள்!

அதோடு நின்று விடாதீர்கள்! நீங்கள் எழுந்து புறப்பட்டு, இயேசு கிறிஸ்துவிடம் வர வேண்டும்.

இயேசு கிறிஸ்துவே உங்களுடைய தகப்பன்! அவரே உங்களை உருவாக்கியவர்! அவர்தான் உங்களுக்காக மரித்தவர்! அவர் உங்களை நேசிக்கிறவர்! **நீங்கள் தைரியமாய் அவரிடத்தில் வரலாம்!**

நீங்கள் உங்கள் பாவத்தை உணர்ந்து மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவிடம் வரும்போது, அவர் உங்களை ஒருபோதும் புறக்கணிக்க மாட்டார்.

**“...என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை.” (யோவான் 6:37)** என்று, கர்த்தராகிய தேவன் வாக்குக் கொடுத்திருக்கிறார்.

நீங்களும் வரலாம்!

உங்களையும் அவர் சேர்த்துக் கொள்வார்!

உங்களை அவர் புறக்கணிக்க மாட்டார்!

உங்கள் வாழ்க்கையில், என்னென்ன காரியங்கள் தேவனுக்கு விரோதமான பாவங்கள், என உணர்த்தப்படுகிறீர்களோ, “அந்தப் பாவங்கள் இனி வேண்டாம்” என்ற தீர்மானத்தோடு இயேசு கிறிஸ்துவிடம் வாருங்கள்.

**“துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ? அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.” எசே. 18:23.**

உங்கள் வழிகளை விட்டுத் திரும்ப வேண்டும்.

இதுவரை உங்கள் விருப்பத்தின்படி நடந்தீர்கள். நீங்கள் விரும்பினதைச் செய்தீர்கள். உங்கள் மனதும், மாம்சமும் வாஞ்சித்ததை நிறைவேற்றினீர்கள்.

"இனி இயேசு கிறிஸ்து விரும்புகிறபடி நடப்பேன். இயேசு கிறிஸ்து விரும்புவதைச் செய்வேன். இயேசு கிறிஸ்து வாஞ்சிப்பதை நிறைவேற்றுவேன்" என்ற தீர்மானத்தோடு நீங்கள் இயேசு கிறிஸ்துவிடம் திரும்ப வேண்டும்.

**"...உங்களுடைய எல்லா மீறுதல்களையும் விட்டுத் திரும்புங்கள்; அப்பொழுது அக்கிரமம் உங்கள் கேட்டுக்குக் காரணமாயிருப்பதில்லை." எசே. 18:30.**

உங்கள் எல்லா மீறுதல்களையும் விட்டு நீங்கள் திரும்ப வேண்டும்.

ஆண்டவருடைய வார்த்தைகளையும், அவருடைய கட்டளைகளையும் மீறி நடந்த உங்கள் எல்லாப் பாவங்களையும் விட்டு, நீங்கள் திரும்ப வேண்டும்.

'மனந்திரும்புதல்' என்பது;

நரகத்தை நோக்கிப் போய் கொண்டிருக்கிற நீங்கள், மோட்சத்தை நோக்கிப் போவது.

சாத்தானை நோக்கி நடக்கிற நீங்கள், இயேசு கிறிஸ்துவை நோக்கி நடப்பது. சாத்தானுக்குப் பிரியமானதைச் செய்து கொண்டிருக்கிற நீங்கள், இயேசு கிறிஸ்துவுக்குப் பிரியமானதைச் செய்யத் தீர்மானிப்பது.

ஒருமுறை, என்னைச் சந்திக்க வந்த ஒரு வாலிபன், தன் பாரத்தை இவ்விதமாக என்னிடத்தில் சொன்னான்:

"நான், என் கண்கள் இச்சித்த எல்லாவற்றையும் அனுபவித்தேன். என் மனது விரும்பியபடியெல்லாம் நடந்தேன். ஆனாலும், என் உள்ளத்தில் சமாதானம் இல்லை. தேவனுக்கு விரோதமாய் பயங்கரமான பாவங்களைச் செய்த என்னை, இயேசு கிறிஸ்து ஏற்றுக் கொள்வாரா? என் பாவங்கள் மன்னிக்கப்படுமா?"

ஒருவேளை இன்றைக்கு, உங்கள் பிரச்சனை இதுவாகக்கூட இருக்கலாம்! "துரோகியாகிய என்னை இயேசு கிறிஸ்து ஏற்றுக் கொள்வாரா? என் பாவங்களை மன்னிப்பாரா?" என்று நீங்கள் கலங்கிக் கொண்டிருக்கலாம்!

**நிச்சயமாக இயேசு கிறிஸ்து உங்களைச் சேர்த்துக் கொள்வார்.** உங்கள் பாவங்களைக் கட்டாயம் மன்னிப்பார். தன் பாவங்களை உணர்ந்து வருகிற யாரையும் கர்த்தர் புறக்கணிக்க மாட்டார்.

மகன், தன் பாவத்தை உணர்ந்து தகப்பனிடத்தில் வந்தபோது, அவன் தூரத்தில் வரும்போதே;

“அவனுடைய தகப்பன்:

**அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவனை முத்தம் செய்தான்.**”

நீங்கள் இயேசு கிறிஸ்துவை நோக்கி, ஒரு அடி எடுத்து வைக்கும்போது, அவர் ஏழு அடிகள் உங்களுக்கு நேராக எடுத்து வைப்பார்.

ஆனால், முதல் அடியை நீங்கள்தான் எடுத்து வைக்க வேண்டும். இன்றே அந்த முதல் அடியை எடுத்து வையுங்கள். இப்பொழுதே இயேசு கிறிஸ்துவை நோக்கி முதல் அடியை எடுத்து வையுங்கள்.

---

“மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்;” எசே. 18:32.

---



8

# உங்கள் பாவங்களை அறிக்கையிட வேண்டும்!

தன் பாவங்களை உணர்ந்து மனந்திரும்பி, தகப்பனிடம் வந்த மகன், தன் தகப்பனை நோக்கி,

**"...தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன், இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல என்று சொன்னான்." லூக்கா 15:21.**

என்னென்ன பாவங்களை நீங்கள் உணர்கிறீர்களோ, அந்தந்தப் பாவங்களை நீங்கள் இயேசு கிறிஸ்துவிடம் அறிக்கையிட வேண்டும்.

"நான் பாவிதான்...என் பாவங்களை மன்னியும்" என்று ஜெபிக்கிற அநேகரை நான் பார்த்ததுண்டு.

பல பாவங்களை உள்ளத்திற்குள் மறைத்து வைத்துக் கொண்டு, "என் பாவங்களை மன்னியும்" என்று பொதுவாக ஜெபித்து, இயேசு கிறிஸ்துவிடம் வந்த அநேகர், சில நாட்களுக்குள்ளாக பின்வாங்கிப் போனதை நான் கண்டிருக்கிறேன்.

ஒரு பாவி மனந்திரும்பும்போது, தன் பாவங்களை அறிக்கையிட வேண்டும் என்பதற்கு மாதிரியாக இந்த ஜெபம் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால், பரிசுத்த ஆவியானவர் உணர்த்தும் **எல்லாப் பாவங்களையும் அறிக்கையிட வேண்டியது மிக அவசியம்.**

இயேசு கிறிஸ்து, உங்கள் இருதயக் கதவைத் தட்டிக் கொண்டு நிற்கிறார். 'இயேசுவே! உள்ளே வாரும்' என்று அழைப்பதனால், அவர் உள்ளே வந்து விட முடியாது. நீங்கள் எழுந்து, கதவில் போட்டிருக்கும் பூட்டை அப்புறப்படுத்தி, கதவைத் திறக்க வேண்டும். அப்பொழுதுதான், அவர் உங்கள் வீட்டிற்குள் வர முடியும்.

இயேசு கிறிஸ்து உள்ளே வரக் கூடாதபடி, நீங்கள் செய்த ஒவ்வொரு பாவங்களும் உங்கள் இருதயக் கதவில் பூட்டுகளாகத் தொங்கிக் கொண்டிருக்கின்றன. நீங்கள் உங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, அறிக்கையிட்டு,

ஒவ்வொரு பூட்டையும் கழட்ட வேண்டும். கடைசிப் பூட்டு கழட்டப்பட்ட பிறகுதான், இயேசு கிறிஸ்து உங்கள் வீட்டிற்குள் வர முடியும்.

'பெருமை'யாகிய பூட்டு, 'கோப'மாகிய பூட்டு, 'பொறாமை'யாகிய பூட்டு, 'சிட்சை'யாகிய பூட்டு, 'பண ஆசை'யாகிய பூட்டு...என்று, இப்படி அநேகப் பூட்டுகள் உங்கள் இருதய வாசலில் தொங்கிக் கொண்டிருக்கின்றன. உங்கள் பாவங்களை அறிக்கையிட்டுத்தான் இப்படிப்பட்ட பூட்டுகளைக் கழட்ட முடியும்.

பரிசுத்த ஆவியானவர் உணர்த்துகிற எந்தவொரு பாவத்தையும் மறைக்காமல், இயேசு கிறிஸ்துவிடம் அறிக்கையிடுங்கள். அவர் உணர்த்துகிறபடி, உங்கள் வாழ்க்கையை சரி செய்து கொள்ளுங்கள்.

மற்றவர்களுடைய பொருட்களை நீங்கள் அநியாயமாய் எடுத்திருப்பீர்களானால், 'அதைத் திரும்பிக் கொடுக்க வேண்டும்' என்று பரிசுத்தாவியானவர் உங்களை உணர்த்துவாரானால், அதை நீங்கள் திருப்பிக் கொடுத்து விடுங்கள்.

யாரோடும் சண்டையிட்டு, பகையோடு, பிரிவினையோடு, மனக் கசப்போடு இருப்பீர்களானால், சம்பந்தப்பட்ட மக்களோடு ஒப்புரவாகிக் கொள்ளுங்கள்.

**"யாவரோடும் சமாதானமாயிருக்க...நாடுங்கள்;" (எபி. 12:14), "...சத்துருக்களைச் சிநேகியுங்கள்;..." (மத்தேயு 5:44)** என்ற வேத வசனத்தின்படி நடந்து கொள்ளுங்கள்.

இவ்விதமாய் உங்கள் பாவங்களை அறிக்கையிடும்போது, கிருபையுள்ள கர்த்தர், உங்கள் பாவங்களை மன்னிப்பார். உங்களைத் தன் பிள்ளையாகச் சேர்த்துக் கொள்வார்.

---

**தன் பாவங்களை அறிக்கை செய்து, அவைகளை விட்டு விடுகிறவன் இரக்கம் பெறுவான்! (நீதி. 28:13).**

---

9

## விசுவாசத்தினால் உங்கள் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும்!

மனந்திரும்பி வந்த மகன், தன் பாவங்களை அறிக்கையிட்டவுடன், ஒரு தவறும் செய்யாதவனைப்போல தகப்பன், தன் மகனை ஏற்றுக் கொண்டான். இதுதான் தகப்பனின் அன்பு!

நம் பரம தகப்பனாகிய இயேசு கிறிஸ்துவும் அப்படித்தான்! நாம் பாவங்களை அறிக்கையிட்டவுடன், நம் பாவங்களை கிருபையாய் மன்னிக்கிறார்.

தகப்பன், மனந்திரும்பி வந்த தன் மகனுக்கு உயர்ந்த வஸ்திரத்தை உடுத்துவித்து, கைக்கு மோதிரத்தையும், கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுவித்தார்.

மறுப்புச் சொல்லாமல், மகிழ்ச்சியோடு அவைகளை ஏற்றுக் கொண்டான் மகன். நண்பரே, நீங்களும் பாவ மன்னிப்பை விசுவாசத்தோடு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

உங்கள் பாவங்களை உங்களுக்கு மன்னிப்பதற்காக, இயேசு கிறிஸ்து தாமே உங்கள் பாவங்களை சிலுவையில் சுமந்து தீர்த்து விட்டார் **(1 பேதுரு 2:24).**

உங்களுடைய பாவங்களினிமித்தம் இயேசு கிறிஸ்து அடிக்கப்பட்டு, உங்கள் அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். உங்களுக்குப் பாவ மன்னிப்பை, சமாதானத்தைக் கொடுக்க, இயேசு கிறிஸ்து சிலுவையில் தன் பரிசுத்தமுள்ள இரத்தத்தைச் சிந்தினார் **(ஏசாயா 53:5, கொலோ. 1:20).**

எல்லாவற்றிற்கும் மேலாக, உங்களுக்காக இயேசு கிறிஸ்து சிலுவையில் பாவமாக்கப்பட்டார் **(2 கொரி. 5:21).**

ஆம்! குடிகாரனை மன்னிக்க, இயேசு கிறிஸ்து ஒரு குடிகாரனாய் ஆக்கப்பட்டார்! விபச்சாரக்காரனை மன்னிக்க, இயேசு கிறிஸ்து ஒரு விபச்சாரக்காரனாக ஆக்கப்பட்டார்! துன்மார்க்கனை மன்னிக்க, இயேசு கிறிஸ்து ஒரு துன்மார்க்கனாய் ஆக்கப்பட்டார்! உங்கள் பாவங்களை மன்னிக்க, இயேசு கிறிஸ்து உங்களைப்போல் ஆக்கப்பட்டார்!

அவர் பாவம் செய்யவில்லை! அவர் பாவமே அறியாத பரிசுத்தர்! ஆனால், அவர் உங்களுக்காகப் பாவமாக்கப்பட்டார்.

உங்கள் பாவங்களைக் கழுவி சுத்திகரிப்பதற்கு, அவர் தன்னுடைய பரிசுத்தமுள்ள, குற்றமற்ற, விலையேறப் பெற்ற இரத்தத்தைச் சிந்தினார்.

இயேசு கிறிஸ்து இவ்விதமாய் சிலுவையில் உங்களுக்காகப் பாடுபட்டு, இரட்சிப்பை, பாவ மன்னிப்பைச் சம்பாதித்து வைத்திருக்கிறார்.

**"...இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்." 1 யோவான் 1:7.**

இந்தப் பாவ மன்னிப்பை, சுத்திகரிப்பை விசுவாசத்தோடு நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**"கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்;..." (எபே. 2:8).**

அநேகர் மனந்திரும்பும்போது, இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெறுவதற்காக தரிசனத்தையும், காட்சியையும், அடையாளத்தையும் தேடிக் கொண்டிருக்கிறார்கள். சிலருடைய வாழ்க்கையில், தேவன் அப்படிச் செய்வதுண்டு!

ஆனால், பொதுவாக இரட்சிப்பைக் குறித்த தேவனுடைய திட்டம், நாம் **விசுவாசத்தினால்** பெற வேண்டும் என்பதுதான்.

**"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்;..." (ஏசாயா 53:5)**

என்ற இந்த வேத வசனத்தை விசுவாசித்து, நாம் பாவி என்பதை உணர்ந்து, இயேசு கிறிஸ்துவிடம் வந்து, நம் பாவங்களை அறிக்கையிடும்போது,

**"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்." (நீதி. 28:13)**

என்ற வேத வசனத்தின்படி, "நமக்கு அவர் இரங்குகிறார்" என்பதை விசுவாசித்து,

**"...இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்." (1 யோவான் 1:7)**

என்ற வேத வசனத்தின்படி, "என் எல்லாப் பாவங்களையும் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் கழுவ வல்லமையுள்ளது" என்பதை விசுவாசித்து,

**"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்." (1 யோவான் 1:9)**

என்ற வேத வசனத்தின்படி, "அவர் நம் பாவங்களை மன்னித்து விட்டார்" என்று விசுவாசித்து...

**"மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்." (சங். 103:12)**

என்ற வேத வசனத்தின்படி, "அவர் நம் பாவங்களை நம்மை விட்டு முற்றிலுமாய் விலக்கி விட்டார்" என்பதை விசுவாசித்து...

**"அவருடைய** (இயேசு கிறிஸ்துவின்) **நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை** (இயேசு கிறிஸ்துவை) **ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்." (யோவான் 1:12).**

என்ற வேத வசனத்தின்படி, "நாம் இப்பொழுது தேவனுடைய பிள்ளை" என்று, முழு இருதயத்தோடும் விசுவாசித்து, தேவனைத் துதிக்க வேண்டும்.

அப்பொழுது மெய் சமாதானமும், சந்தோஷமும் நம் உள்ளத்தை நிரப்புவதைப் பார்க்கலாம்.

பரிசுத்தாவியானவர் கொடுக்கும் இந்த சந்தோஷமே, நம் இரட்சிப்பிற்கு அசைக்க முடியாத ஒரு அடையாளமாகும்.

**"நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார்." ரோமர் 8:16.**

இவ்விதமாக, பரிசுத்தாவியானவர் நம் ஆத்துமாவில் கொடுக்கும் சந்தோஷமும், சமாதானமும், நிச்சயமுமே, “நாம் இரட்சிக்கப்பட்டோம்!” என்கிற ஒரு உறுதியை நமக்குக் கொடுக்கிறது.

---

**பரிசுத்தாவியானவர் நம் உள்ளத்தில் கொடுக்கும் தெய்வீக சமாதானமே, இரட்சிப்பின் உறுதி!**

---



## 10 வாயினால் அறிக்கையிட வேண்டும்!

**“நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்.” ரோமர் 10:10.**

நாம் பெற்றுக் கொண்ட இரட்சிப்பின் சந்தோஷத்தை, நம் வாயினால் மற்றவர்களுக்குச் சொல்லும்போதுதான், இரட்சிப்பு பூரணமடைகிறது.

இரட்சிக்கப்பட்ட அநேகர், பின்வாங்கிப் போகக் காரணம்; தாங்கள் பெற்றுக் கொண்ட விலையேறப் பெற்ற மகிமையான இந்த இரட்சிப்பை, மற்றவர்களுக்குச் சொல்லாததேயாகும்.

நாம் பெற்றுக் கொண்ட இந்த இரட்சிப்பை, நம் வாயினால் அறிக்கையிட்டே ஆக வேண்டும்.

சிலர், “இரட்சிக்கப்பட்டால் நமக்கு மட்டும் தெரிந்தால் போதாதா? இதை ஏன் கூட்டத்தில் சொல்ல வேண்டும்?” என்று கூறிக் கொண்டிருப்பார்கள்.

ஆனால், பரிசுத்த வேதாகமம் சொல்கிறது;

“...**இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்.” ரோமர் 10:10.**

நீங்கள் பெற்றுக் கொண்ட இரட்சிப்பை, நீங்கள் பெற்றுக் கொண்ட பாவ மன்னிப்பை, நீங்கள் பெற்றுக் கொண்ட சமாதானத்தை, உங்கள் வாழ்க்கையில் இயேசு கிறிஸ்து செய்த மாற்றத்தை மற்றவர்களுக்கு சாட்சியாகச் சொல்லுங்கள்.

அப்படி உங்கள் வாயினால் அறிக்கையிடும்போது;

உங்களை இரட்சித்த இயேசு கிறிஸ்து மகிமைப்படுகிறார்!

எதிராளியாகிய பிசாசு துக்கப்படுகிறான்!

---

**நீங்கள் சொல்லும் சாட்சியினால் பிசாசானவன் வெட்கப்படுகிறான்!**

---

## 11 நீங்கள் ஏன் பெற்றுக் கொள்ளக் கூடாது?

சிநேகிதனே, **நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டும்** என்பதற்காகத்தான், ஆவியானவர் இந்தச் செய்தியை எழுதியிருக்கிறார்.

உங்களுக்காக சிலுவையில் சம்பாதிக்கப்பட்ட **இந்த இரட்சிப்பை, நீங்கள் ஏன் பெற்றுக் கொள்ளக் கூடாது? இன்றே இரட்சண்ய நாள்!**

இதுவே உங்களுக்கு அனுக்கிரக காலம்! 'இன்னொரு நாள்' என்று, தள்ளிப் போடாதீர்கள். இன்னொரு நாள் உங்கள் வாழ்க்கையில் வருவது, உங்கள் கரத்திலல்ல.

ஆகவே, இதுதான் உங்கள் இரட்சிப்பின் நாள்! இதுதான் நீங்கள் பாவ மன்னிப்பைப் பெற வேண்டிய நாள்! இதுதான் நீங்கள் மெய் சமாதானத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நாள்! இதுதான் நீங்கள் தேவனுடைய பிள்ளையாக மாற வேண்டிய நாள்!

இன்றே...இப்பொழுதுதே...

தனித்துப் போய் இயேசு கிறிஸ்துவின் பாதத்தில் முழங்கால்படியிடுங்கள். உங்களுக்காக சிலுவையில் மரித்த இயேசு கிறிஸ்துவிடம் உங்கள் பாவங்களை அறிக்கையிடுங்கள்.

"நான் பாவிதான் ஆண்டவரே!..." என்று ஒத்துக் கொள்ளுங்கள். ஆவியானவர் உணர்த்தும் பாவங்களை அறிக்கையிடுங்கள்...பாவ பாரம் மாறும்வரை, கண்ணீரோடும், பாரத்தோடும், உடைந்த உள்ளத்தோடும் ஜெபியுங்கள். இயேசு கிறிஸ்து உங்கள் பாவங்களை மன்னித்து விட்டார் என்கிற விசுவாசத்தோடு அவரை ஸ்தோத்தரியுங்கள்.

இரட்சிப்பைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்...
உங்கள் பாவம் மன்னிக்கப்பட்டது...
நீங்கள் இப்பொழுது தேவனுடைய பிள்ளை.
ஆ...என்ன சந்தோஷம்! என்ன சந்தோஷம்!

---

**"ஆம். நான் தேவனுடைய பிள்ளை!"**

---

## 12 இரட்சிப்பைப் புறக்கணித்தால்?

**"...இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம்." எபி. 2:4.**

இயேசு கிறிஸ்து தாமே சிலுவையில் மரித்து, இரத்தத்தைச் சிந்தி, உங்களுக்காக இரட்சிப்பைச் சம்பாதித்து வைத்திருக்கிறார். இந்த விலையேறப் பெற்ற **இரட்சிப்பைப் புறக்கணிப்பீர்களானால், தண்டனைக்கு நீங்கள் தப்பித்துக் கொள்ள முடியாது.**

தேவனுடைய ராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க முடியாது **(யோவான் 3:3).** மரணத்திற்குப் பின் அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவீர்கள் **(வெளி. 20:15, 21:8).**

நண்பரே, உங்கள் நிலை என்ன?

மனந்திரும்பி, இம்மையில் சமாதானத்தையும், மறுமையில் பரலோக ராஜ்யத்தையும் சுதந்தரிக்கப் போகிறீர்களா?

அல்லது,

மனம்போல் பாவத்தில் வாழ்ந்து, இம்மையில் சமாதானமற்ற வாழ்க்கையையும், மறுமையில் அக்கினிக் கடலையும் தெரிந்து கொள்ளப் போகிறீர்களா?

**நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்!**
இன்றே தீர்மானித்துக் கொள்ளுங்கள்!
இப்பொழுதுதே தீர்மானித்துக் கொள்ளுங்கள்!

---

**இரட்சிப்பைப் புறக்கணித்தால், தண்டனைக்குத் தப்பித்துக் கொள்ளவே முடியாது!**

---

# 13 இரட்சிக்கப்படும்போது...

நாம் இரட்சிக்கப்படும்போது, பல காரியங்கள் சம்பவிக்கின்றன.

**அ) நம் உள்ளத்தில் சமாதானம்!**

பாவத்தின் பாரத்தினால் சமாதானத்தை இழந்திருந்த நம் உள்ளத்தில், தெய்வீக சமாதானம் நிரம்பி வழிகிறது. பயத்தோடும், கலக்கத்தோடும், துக்கத்தோடும் இருந்த நம் உள்ளத்தில் தைரியமும், விசுவாசமும், நம்பிக்கையும், மகிழ்ச்சியும் புரண்டோடுகிறது. "மரணத்திற்குப் பின், தேவனுடைய ராஜ்ஜியத்தில் தேவனோடு இருப்பேன்" என்ற நிச்சயம் நம் உள்ளத்தில் வந்து விட்டது.

**ஆ) பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம்!**

**"...மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும்..." (லூக்கா 15:7).**

நாம் மனந்திரும்புகிறதைப் பரலோகமே கவனித்துக் கொண்டிருக்கிறது! ஒரு பாவி மனந்திரும்பும்போது, பரலோகமே சந்தோஷமடைகிறது. நம் இரட்சிப்பிற்காக, தன் ஒரே பேரான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இவ்வுலகிற்கு அனுப்பிய பிதா சந்தோஷப்படுகிறார்.

நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் மரித்து, உயிர்த்தெழுந்த **இயேசு கிறிஸ்து சந்தோஷப்படுகிறார்!**

**நம்மைக் கடைசி வரை வழி நடத்தப் போகிற பரிசுத்த ஆவியானவர் சந்தோஷப்படுகிறார்.**

பரலோகத்திலுள்ள பரிசுத்தவான்கள் மத்தியில் சந்தோஷம் உண்டாகிறது! தேவனுடைய தூதருக்கு முன்பாக சந்தோஷமுண்டாயிருக்கிறது **(லூக்கா 15:10).**

இளைய குமாரன் மனந்திரும்பி, தன் தகப்பனிடம் வந்தபோது, தன் மகனை மன்னித்து, சேர்த்துக் கொண்ட தகப்பன்;

**"...நாம் புசித்து, சந்தோஷமாயிருப்போம். என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான் என்றான். அப்படியே அவர்கள் சந்தோஷப்படத் தொடங்கினார்கள்." லூக்கா 15:23, 24.**


### இ) பாதாளத்தில் துக்கம்!

ஒரு பாவி மனந்திரும்பி இரட்சிக்கப்படும்போது, நரகத்தில் துக்கம் உண்டாகிறது. பிசாசின் ஆளுகைக்குள்ளிருந்து இயேசு கிறிஸ்துவின் ஆளுகைக்குள் ஒரு ஆத்துமா வந்தபடியினால், பாதாளத்தில் சாத்தானோடு வேதனைப்பட ஒரு ஆத்துமா அவனுக்குக் குறைந்து விட்டது. ஆகவே, நாம் மனந்திரும்பும்போது, சாத்தான் துக்கப்படுகிறான்.

---

**ஒரு பாவி மனந்திரும்பும்போது, அவனுடைய உள்ளத்தில் மிகுந்த சமாதானம்!**
**பரலோகத்திலும் மிகுந்த சந்தோஷம்!**
**ஆனால், பாதாளத்திலோ மிகுந்த துக்கம்!**

---



# இரட்சிக்கப்பட்ட பின்...

**இரட்சிப்பைக் காத்துக் கொள்ளுங்கள்!**

ஆண்டவருடைய இரக்கத்தினால் பெற்றுக் கொண்ட **இரட்சிப்பைக் காத்துக் கொள்வதில், ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.**

**"முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்." மத்தேயு 24:13.**

இரட்சிப்பைக் காத்துக் கொள்வதற்கு, இரட்சிப்பைப் பற்றிய சில காரியங்களை அறிந்து கொள்ள வேண்டும்.

**1. இரட்சிக்கப்பட்டேன்!**

இதுதான் கிறிஸ்தவ வாழ்க்கையின் முதல் அனுபவம், பாவத்தை விட்டு மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை உள்ளத்தில் ஏற்றுக் கொள்ளும்போது, "பாவ மன்னிப்பை," "இரட்சிப்பை" பெற்றுக் கொள்கிறோம். "இயேசு என்னை இரட்சித்திருக்கிறார்!" என்று சொல்லக் கூடிய தைரியத்தைப் பெற்றுக் கொள்கிறோம்.

**2. இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறேன்!**

ஒரே நாளில் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்பட்டவுடன், கிறிஸ்தவ வாழ்க்கையில் எல்லாம் முடிந்து விடுவதில்லை. அதுதான் ஆரம்பம். 'இரட்சிக்கப்பட்டேன்' என்பதுதான் கிறிஸ்தவ வாழ்க்கையின் முதல்படி.

இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றுவிட்டபடியினால், இனி பாவமே செய்ய முடியாதென்பதல்ல. நாம் இரட்சிக்கப்படும்போது, பாவத்தின் வல்லமையில் இருந்து மீட்கப்படுகிறோம். ஆனால், பாவப் பிரசன்னத்தில்தான் இருக்கிறோம். இந்த உலகத்தில் இருக்கும் வரை, பாவப் பிரசன்னத்தை விட்டு நாம் ஓடவே முடியாது. ஆகவேதான், பாவப் போராட்டம் நமக்குள் இருந்து கொண்டேயிருக்கிறது.

பாவம் நம்மை சூழ்ந்திருக்கிறது. வீட்டில், வெளியில், படிக்கிற இடத்தில், வேலை செய்கிற இடத்தில் எங்கும் பாவ

சோதனைகள் நம்மை நெருங்குகின்றன. இரட்சிக்கப்பட்ட தேவப் பிள்ளைகள் விரும்பி பாவம் செய்வதில்லை. ஆனால், தினமும் நம் வாழ்க்கையில் தவறுகள் நடந்து விடுகிறது.

ஆனால், ஒரு சிறு தவறு நடந்து விட்டாலும், அது நமக்கு மிகுந்த வேதனையைக் கொடுக்கும். "இந்தப் பாவத்தைச் செய்து விட்டேனே!" என்று நமது உள்ளம் வேதனைப்படும். உடனே அந்தக் குறிப்பிட்ட பாவத்தை ஆண்டவர் மன்னிக்கும்படி, ஜெபிக்க வேண்டும். இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறபடியால், உடனே நம்முடைய அந்தக் குறிப்பிட்ட பாவத்தை மன்னித்து, தெளிந்த சமாதானத்தை மறுபடியும் உள்ளத்தில் தருவார்.

**"...ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரரா யிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்." 1 யோவான் 2:1.**

**"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்." 1 யோவான் 1:9.**

ஒவ்வொரு நாளும் நமது வாழ்க்கையை தேவ சமூகத்தில் வைத்து ஆராய்ந்து, அவர் நம்மைக் கழுவுவதற்கு இடம் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்யும்போது, நாம் பரிசுத்தத்தில் வளர்ந்து கொண்டேயிருப்போம்.

"தினந்தோறும் இரட்சிக்கப்பட்டுக் கொண்டே யிருக்கிறேன்" என்கிற அனுபவத்தில் நாம் கடந்து செல்ல வேண்டும்.

**3. இரட்சிக்கப்படுவேன்!**

இயேசு கிறிஸ்து மறுபடியும் உலகத்தில் வருவார். இரட்சிக்கப்பட்ட தேவப் பிள்ளைகளை தன்னோடு சேர்த்துக் கொள்வார். அந்நாளில் உலகத்தை விட்டே நாம் எடுக்கப்பட்டு, ஆண்டவரோடு இருக்கப் போவதினால், அதன் பிறகு நாம் பாவம் செய்ய முடியாது. அந்த நாளில்தான், நாம் முழுமையாக இரட்சிக்கப்படுகிறோம். ஆகவேதான்,

**“முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்.” (மத்தேயு 24:13)** என்று இயேசு கிறிஸ்து கூறினார்.

இயேசு கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்து, நமது இரட்சிப்பைக் காத்துக் கொள்ள வேண்டும்.

---

**“தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது; லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது.”** 2 **கொரி.** 7:10.

---

**சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்கள்
எழுதிய ஆவிக்குரிய புத்தகங்கள்
மற்றும் வேதாகமங்கள்
அனைத்து **இயேசு விடுவிக்கிறார்**
**கெத்செமனே ஜெப மையத்திலும்,**
**Online Shopping** மூலமாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.

Online Shopping: **www.jrbibleworld.com**

**‘இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?’**

என்ற இப்புத்தகத்தின் மூலம்

## நான் பெற்ற ஆசீர்வாதங்கள்!

(கட்டத்தில் ✓ செய்யவும்)

☐ இயேசு கிறிஸ்துவைப் பற்றி முதன்முதலாக அறிந்து கொண்டேன்.

☐ இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக் கொண்டேன்.

☐ பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும், வழிநடத்துதலையும் பெற்றுக் கொண்டேன்.

☐ **‘இரட்சிப்பைக் காத்துக் கொள்வது எப்படி?’** என்ற புத்தகத்தை எனக்கு இலவசமாக அனுப்பி வைக்கவும்.

☐ ------------------------------------------------

------------------------------------------------

☐ ------------------------------------------------

------------------------------------------------

எனது முகவரி:

------------------------------------------------

------------------------------------------------

------------------------------------------------

------------------------------------------------

**குறிப்பு: தயவு செய்து இந்தப் படிவத்தை நிரப்பி, பின்பக்கம் உங்கள் ஜெபக் குறிப்புகளையும் எழுதி எங்களுக்கு அனுப்பி வைக்கவும்.**

# ஜெபக் குறிப்புகள்



# WHAT SHOULD I DO TO BE SAVED?

Jesus Redeems Ministries
Nalumavadi - 628211,
Thoothukudi Dist., Tamilnadu, India.
**Phone:** +91 4639 - 35 33 33,
**Email:** Info@jesusredeems.org

315000032

**For 24 hrs Prayer Support: +91 4639 - 35 35 35**

*Online Shopping:* **www.jrbibleworld.com**